குயில்

கிழமை இதழ்

ஆசிரியர் :

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 17-6-58 செவ்வாய் | இசை: 3

வெளியேறு!

இன்று காணும் தென்பெ ருங்கடல்,
முன்னாள் முதற்றமிழ்க் கழகம் இருந்த
குமரி நாடு! இன்னும் கூறுவேன்;
இந்நாள் ஆரியர் இருக்கும் நாடு
முன்னாள் தமிழ்கமழ் முல்லைக் காடு!
தெலுங்கம், கன்னடம், சேரலம், வங்கம்
எனும்பெயர் உடையவை எலாம்தமி ழகமே!
கொடுங்கடல் கொண்ட குமரி தொடங்கி
பனிவரை வரைக்கும் பரந்த தமிழகம்
உமதெனில், நாட்டில் உமக்குள உரிமையும்
உமக்குள பொறுப்பும் ஒருவர்க்கும் இல்லை.
உணர்வினால் உம்மை நோக்குக! நீவிர்
மாடோட்டி வந்த நாடோ டிகளா?
ஒருகுடிக் குரிய வாழ்வின் உட்புகுந்து
கலகம் விளைத்துப் பிழைக்கும் கயவரா?
இல்லை, இல்லை இம்மியும் இல்லை!
"என்கீழ் தமிழகம் இருக்க வேண்டும்"—
என்னும் கீழ்மகன் தன்னை, அவனின்
காலடி நத்தும் கடைய னோடு
வெளியேறு நாட்டைவிட் டென்று
"பளீர்"என்று சொல்லுவீர் பச்சைத் தமிழரே!

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௯ ஆனி ௩.

வாழ்க பெரியார்!

வருக! வருக! வண்டமிழ் நாட்டின்
பெருகுசீர்த் தந்தையே பெரியாரே வருக!
சாதிக் காதரவு தருமோர் ஏட்டினைத்
தீக்கிரை செய்க என்றது தீதென்று
திங்கள் ஆறு சிறையில் இட்டனர்
அழிந்துகொண் டேவரும் நேருவின் அரசினர்
தீயர் தீர்ப்புக்கு மகிழ்ந்தீர் ஆயினும்,
உங்கள் உயிர்நிகர் அன்புத் தொண்டர்
நாலா யிரவரைச் சிறையில் நசுக்கி,
அவரில் எழுவரின் ஆவி குடித்ததை
எண்ணி எண்ணி இருந்த சிறையெலாம்
கண்ணீ ராக்கிக் கதறினீர். அதனையாம்
நினையா திருக்க முடிய வில்லை.
நினைதொறும் நெஞ்சு பொறுக்க வில்லை.
வருக ஐயா! நன்றே வருக!
நரிவட வர்க்கும் நமக்குமாம் தொடர்பைத்
திருகிப் புய்க்கச் சிலநாள் செல்லும்;
வெட்டிப் பிரிக்க வேண்டும் நொடியில்!
இருநூ றுயிரம் பேர்கள் இங்குளோம்.
நல்கும் திட்டப் படியே நடப்போம்!
உயிர் பெரிதன்று, பெரிதன் றுடைமை
வெற்றி பெரிது! மனதில்
உற்றது வெல்க! தமிழ்நாடு வாழ்கவே!

★

தறித் தொழிலாலே...

எடுப்பு.

தறித் தொழிலாலே கைத்
தறித் தொழிலாலே...

உடனெடுப்பு.

தமிழ்த் திருநாடே என்
தமிழ்த் திருநாடே
தழைத்து வருகின் றுய் வறுமையைத்
தணித்து வருகின்றுய் வாழ்க!
தறித் தொழிலாலே...

அடிகள்.

பறிக்கும் பட்டாடை! கண்ணைப்
பறிக்கும் பட்டாடை! ஒளி
பாய்ச்சும் நூலாடை!
சிறக்கும் வானும் கதிரும் நிலவும்
சேர்த்து நெய்த பொன்னுடை!
செந்தமிழ் நாடே தந்தாய்!
சிறுமையைத் தவிர்த்தாய் நாட்டின்
பெருமையை வளர்த்தாய் வாழ்க!
தறித் தொழிலாலே...

அழகு செய்வதெல்லாம் அழகுக்
கழகு செய்வதெல்லாம் கைத்தறி
ஆடைகள் அல்லவோ?
இழைகள் எல்லாம் பால்நுரையாய்
இனங்கள் எல்லாம் புதியவையாய்ப்
பழந்தமிழ் நாடே அளித்தாய்
பாவையரின் ஆடவரின்
ஆவலைத் தவிர்த்தாய் வாழ்க!
தறித்தொழிலாலே...

★

ஆசிரியருக்கு அஞ்சல்

(கேள்வியும் - விடையும்)

கேள்வி :

அடிகள் என்று பெரியோர்களையும் கடவுளரையும் சொல்லுகிறார்கள். ஒன்றும் விளங்கவேயில்லை. விளக்க வேண்டுகிறேன்.

விடை :

தோழருக்கு மட்டுமா விளங்காமலிருக்கிறது ! தமிழ்ப்புலமைமிக்க புலவர் பலர்க்கு விளங்கவில்லை என்று நினைக்கவேண்டியதாகிறது.

அடி தாள் என்பன ஒருபொருட்சொற்கள். அடி, தாள் என்றால் மக்கள் உறுப்பாகிய காலையே குறிப்பதாகக் கொள்ளக்கூடாது. வேறுபொருளும் உண்டு. அதுதான் " தத்துவம் " என்பது.

இனி, அடிகளே என்று பெரியோர்களைச் சொன்னால், தத்துவ உணர்வு உடையவரே என்று பொருள். அடிகளே என்று கடவுளைக் கூறினால் தத்துவனே என்றுபொருள்.

அடிகள்என்னும் வழக்குத் திருவாரூர்க் கபிலர் தொகுத்த எண்ணூல் அதாவது சாங்கிய நூல் வழக்கு.

அனைத்தும் இருபத்தைந்து தத்துவத்துள் அடங்கின என்று சாங்கிய நூல் சாற்றுகின்றது. அதுவேயுமன்றி, அனைத்தும் இருபத்தைந்து தத்துவமாம் என்றுணர்ந்த நிலையே விடுதலைஎன்றும் அச் சாங்கிய நூல் உறுதிசெய்கின்றது.

அடிகள் என்ற சொல் சமண்சமையத்தாருடையது என்றும், சைவ சமயத்தாருடையது என்றும் கூறிக்கொள்வது பொருத்தமன்று.

திருக்குறளில் தாள் என்றும் அடி என்றும் வருமிடங்களில் இவ்வாறே பொருள் காண வேண்டும்

திருக்குறள் மடத்துப் பதிப்பில் நற்றாள் என்பது சிவபெருமான் சீபாதம் என்று பொருள் சொல்லப் பட்டிருப்பதும் கலப்பற்ற பிழையேயாம்.

திருக்குறளில் அடி என்றும் தாள் என்றும் வந்துள்ளதால், திருவள்ளுவர் உருவவணக்கத்தை

மாலைப்பொழுது!

—சு. மா. இராமலிங்கன்—

காணுது காணுது செம்மைநிறம் — அந்தக்
காட்சியை என்னென்று சொல்லுவது !
மாணுயர் வானிற் பொன்னிறத்தைப் — பாய்ச்சி
வேடிக்கை காட்டுது செம்பரிதி.

வானப் பறவையும் தேன்சிட்டும் — அங்கே
வட்டமாய்ப் பறக்குது பார்த்திடடா !
கான மிசைத்திடும் பூங்குயிலும் — கவி
பாடி அழைக்குது தோழர்களை !

தென்றல் தவழும்நல் வேளையடா ! — முல்லைத்
தேன்மலர் பூத்திடும் மாலையடா !
குன்றுமுதல் பெரும் கோவில்வரை — இன்பக்
கோலமிகும் எழில் மாலையடா !

ஆலை முதல்நெடுஞ் சாலைவரை — தம்
ஆளருடன் கடும் வேலைசெய்து
மாலை வந்ததும் விடுசெல்லும் — அந்த
மங்கையர் கூட்டத்தைப் பார்த்திடடா !

ஏற்றம் பிடித்திறைத் தாரோடும் — நல்ல
ஏரைப் பிடித்துழு தாரோடும்
நாற்றுகள் நட்டுக் களையெடுத்தோர் — அந்த
நங்கையர் செல்வதைப் பார்த்திடடா !

★

ஒப்புகின்றார்என்று வேறுசிலர் எண்ணுகின்றார்கள். அதுவும் மேற்கூறியவாறு பிழையேயாம் ஏன்எனில்,

> ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
> மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

என, உருவ வணக்கத்தை மறுக்கும் வள்ளுவரே அதைஏற்பாரா? ஏற்கமாட்டாரன்றோ!

இனித் தத்துவம் என்ற சொற்பற்றியும் சில கூறுவோம்.

தத்துவம் வடமொழியன்று. தன்மையின் அடியாகிய தன் துவம் பெற்று வடமொழிச் செய்கைக்கு உட்பட்டது. துவம் நீக்கி தன்மை என்று சொன்னாலே தத்துவம் அடி தாள் என்று சொன்னதேயாகும் என அறிதல் வேண்டும். தத்துவம் என்ற சொல்லுக்கு நாம் கொள்ளும் பொருளை வடசொல் கொள்ளவில்லை என்பது ஆராயற்பாலது.

அவள் உதடு

சிரிப்பைக் கொண்டு செய்த உதடு
சிரித்துக் கொண்டே யிருந்தது — பாங்கனே !
சிரித்துக் கொண்டே யிருந்தது.

ஒருதிங்க ளாய்உன் முகம்காணேன் என்ருள் — நான்
ஒன்றுமே சொல்லாமல் ஊமைபோல் நின்றேன்
உருவப் படம்கேட்டேன் தரவில்லை என்ருள்
ஓகோ நானதை மறந்தேனே என்றேன்
அரிவை உள்ளம் அழுதுகொண் டிருந்ததெனினும்
சிரிப்பைக் கொண்டு செய்த உதடு
சிரித்துக் கொண்டே யிருந்தது—பாங்கனே!
சிரித்துக் கொண்டே யிருந்தது !

உனைக்காணு திரவில் தூங்கிடேன் என்ருள் — உனை
ஒருநொடி யேனும் பிரிந்திடேன் என்ருள்
எனக்குப் பிறநாட்டில் வேலையுண் டென்றேன்
இரண்டு திங்கள் வரேன்என்று சொன்னேன்
புனைபாவை உள்ளம் அழுதுகொண் டிருந்ததெனினும்
சிரிப்பைக் கொண்டு செய்த உதடு
சிரித்துக் கொண்டே யிருந்தது — பாங்கனே!
சிரித்துக் கொண்டே யிருந்தது !

இருப்பதாய் இருந்தால் என்னிடம் சொல்க—நீ
போவதா யிருந்தால்என் கட்டைக்குச் சொல்என்ருள்
வருத்தத்தால் ஒன்றுமே சொல்லவில் லை நான்
வாழ்வென்னைக் கைவிடு மோஎன் றெண்ணினேன்
திருப்பாவை உள்ளம் அழுதுகொண் டிருந்ததெனினும்
சிரிப்பைக் கொண்டு செய்த உதடு
சிரித்துக் கொண்டே யிருந்தது — பாங்கனே!
சிரித்துக் கொண்டே யிருந்தது !

★

நாட்டு வாழ்த்து

தமிழ் நா டே வாழ்க! — எம்
தாய் நா டே வாழ்க!
அமிழ் தா கியஇய லிசைகூத் தென்னும்
தமிழா கிய உயிர் தழையும் விழுமிய
தமிழ்நாடே — வாழ்க!
இலங்கை சிலம்பும் குமரித் திருவடி தென்பால்
எழிலார் விந்தக் குழலார் வேங்கடம் வடபால்
கலங்கொள் முத்துக் கடலும் பவழக்
கடலும் கிழக்கு மேற்கில் உடுத்த
தமிழ்நாடே — வாழ்க!
குன்றுகள் வான்தொடும் எரிமலை அறியாய்
பெருநில முடையாய் நடுக்க மறியாய்
தென்றற் குளிரும் செங்கதிர்ச் செல்வமும்
தெண்ணீர் வளவயற் செந்நெலும் கொழிக்கும்
தமிழ்நாடே வாழ்க!

எழுந்தது சிங்கம்

— துரை மாணிக்கம் —

கூட்டைத் திறந்ததும் கடுங்குரல் எழுப்பிக்
குறுநடை போட்டது சிங்கம் – சாதிக்
கேட்டை ஒழித்திட, சிறுநரிக் கூட்டம்
கிடுகிடுத் தொடுங்கின எங்கும்!
நாட்டைக் குழப்பிடும் சாதியும், மதமும்,
நசுங்கிட வெழுந்தது சிங்கம் – அதன்
பாட்டைக் கெடுத்திடும் நாய்க்குல மழிக்கப்
பெரும்படை திரண்டதே எங்கும்

பேச்சும், துணிவும் 'பெருந்திறல் உரனும்'
பணிவும் அதன்கை வாளாம் – அதன்
மூச்சும், வாழ்வும் முத்தமிழ்த் தொண்டாம்!
மாற்றார் அதன்முன் தூளாம்!
காய்ச்சும் வெயிற்கும், கடுங்குளிர் மழைக்கும்
கம்பிச் சிறைக்குமஞ் சாது! – சாதி
பாய்ச்சும் கொடுமைப் பாதையைத் தூர்க்கப்
பகலும் இரவுந்துஞ் சாது!

தாய்சொல் தட்டேல்

பட்டுக் குஞ்சுகள் எட்டைக் கோழி
இட்டுக் கொண்டே போகும்
எட்டுக் குஞ்சும் தாய்சொல் லுக்குக்
கட்டுப் பட்டே மேயும்
தட்டுக் கெட்டுப் போனல் ஒன்று
தட்டிப் போகும் பருந்தே
விட்டுத் தப்பி னாலும் பூனை
விட்டுவி டாது விருந்தே.

★

யார் குற்றவாளி?

கொஞ்சு குயில்ஒன்று கூகூ என்றது
தென்றலால் அசைந்த செவ்விதழ் அல்லி
இகழ்ச்சிச் சீழ்க்கை அடித்ததாய்த் [தான்
தகாதிது தடாபுடா என்றது தவளையே!

★

அம்மைச்சி

(நாடகம்)

காட்சி: க.

இடம் : காஞ்சி தேரோடும் தெருவில் ஒரு வீடு.

நேரம் : காலை.

கதையுறுப்பினர் : பாவல்லாள் அம்மைச்சி, பார்ப்பனன் பட்டாபிராமன்.

நடைமுறை : அம்மைச்சி தடுக்கில் உட்கார்ந்து கருத்தாக எழுத்தாணியால் ஏட்டில் எழுதிக்கொண்டிருக்கிருள்.

பார்ப்பனன் பட்டாபிராமன் பொன்னுடையுடுத்துப் பொன்னுடை போர்த்து வைரக் கடுக்கன் முகத்துக்கு விளக்கேந்த மணப்பூச்சு வருகை தெரிவிக்க வந்து சேர்ந்தான்.

அம்மைச்சி — வருக! முன்னறிவிப்பு இல்லாமல் வந்தீர்கள். அப்படிப்பட்ட தேவை என்ன? வருக!

பட்டாபிராமன் — ஏதுஎது உனக்குமுன்னறிவிப்பும் வேண்டுமோ! சரி சரி, நான் வந்தது எதற்கு? அதைக்கேள். நீ தொழில் செய்வதில்லையாமே! சாதித்தொழிலை நிறுத்தலாமோ! இருக்கட்டும். என் நிலை உனக்குத் தெரியுமோ? ஆத்துக்காரி இறந்துவிட்டாள். ஆறு திங்கள் ஆகின்றன. உன் நினைவு வந்தது. பார்த்துப் போக வந்தேன். உனக்கு நல்ல வேளையாக இளமை மாறிப் போய்விடவில்லை. அழகும் குறைந்துவிடவில்லை. நீ என்னைப் பார்க்கிருய். என்னைக் கிழவன் என்று எண்ணமாட்டாய். நான் அழகிலும் குறைந்தவன் அல்லேன். என்ன! பேசாமல் இருக்கிருயே....!

அம் — தமிழுண்டு நானுண்டு. நான் வினவறிந்த நாள் முதற்கொண்டு! இனியும் தமிழுண்டு நான் உண்டு சாவுண்டு! அவ்வளவுதான்! பிறகு...

பட் — என்னைப் போகவா சொன்னுய்.

அம் — சொன்னுல் என்னுய்விடும்?

பட் — எண்ணத்தில் ஆழ்ந்துள்ள உனக்கு இடையூறு செய்யவில்லையடி நான்.

அம் — எண்ணத்தில் ஆழ்ந்துள்ள என் எதிரில் நாயோடா, நரியோடா!

பட் — பாட்டுப் பாடலாம்—நாட்டார் குளிக்கும் பொதுக்குளந்தானே நீ!

அம் — கேட்டுத் திருந்தலாம். துறையறியாது கெட்டொழியும் துடுக்கு வேண்டாம்.

பட்டாபி —
அம்மைச்சி தாசி அவள்தொழிலை விட்டுவிட்டுச்
செம்மைத் தமிழ்பாடச் சென்றதேன்?

அம்மைச்சி — — உம்மனைவி
தங்கச்சி அக்காபெண். தாசிகளாய்க் கண்டார்க்
தங்கச்சு விற்பதனுல் தான். [கும்

எனப், பட்டாபி முன்னிரண்டடி பாட அம்மைச்சி தனிச் சொல்லையும் பின்னிரண்டடிகளையும் பாடி வெண்பாவை முடிக்கிருள். இதில் தங்கச்சு என்பதற்குப் பொருள் தமது இரவிக்கை என்பது.

பட்டாபி சினத்தோடு வெளியே செல்லுகிருன்.

காட்சி: ௨.

இடம்: ஷி யூர்க் குளக்கரை

காலம்: *மாலை ௬ மணி*

கதையுறுப்பினர்: *பட்டாபியும் பத்துப் பார்ப்பனர்களும்.*

நடைமுறை: *படித்துறையில் பத்துப் பேரும் அமர்ந்திருக்கப் பட்டாபி நின்றபடி அறிவிக்கிறான்.*

பட்டாபி – காலையில் அம்மைச்சி வீட்டுக்குப் போனேன்.

ஒரு பார்ப்பனன் – என்ன நடந்தது!

பட்டாபி – காமக் கனல் தணிய அந்தக் காவேரியில் மூழ்கினேன்.

எல்லாரும் – மகிழ்ச்சி! மகிழ்ச்சி!!

பட்டாபி – இன்பந் தந்தது மட்டுமல்ல. இருநூறு வெண்பொற்காசுகள் என் காலில் வைத்துக் கும்பிட்டாள். நான் உயர்ந்த குலத்தான் ஆதலால்!

ஒருவன் – மேலே?

பட்டாபி – நான் பெற்ற இன்பம் பெறுக என் இனத்தார்.

எல்லாரும் – மகிழ்ச்சி! மகிழ்ச்சி!

காட்சி: ௩.

இடம்: *அம்மைச்சி வீடு*

நேரம்: (*மறுநாள்*) *காலை*

உறுப்பினர்: *அம்மைச்சி, திருப்புளி ஐயங்கார்.*

நடைமுறை: *அம்மைச்சி எழுதிக்கொண்டிருக்கிறாள். திருப்புளி சிரித்துக்கொண்டே உள் நுழைகிறான்.*

திருப்புளி – அம்மைச்சி, என்னைத் தெரியுமோ உனக்கு! நான் பரந்தாம ஐயங்கார் இளைய மகன்.

அம்மைச்சி – சரி, எங்கே இங்கே?

திருப் – உன்னிடந்தான் வந்தேன். பூவிடம் வண்டு வந்ததென்றால் காரணம் கேட்கவா வேண்டும்?

அம் – இது இரும்படிக்கும் இடமாயிற்றே! நாய்க்கு இங்கே வேலையில்லையே என்றேன்.

திருப் – பாடிவிடு ஒன்று, ஆடிவிடு சற்றே.

அம் – ஓடிவிடு விரைவில்...

என்று அதட்டிய அதட்டல் வெளியில் தள்ளியது பார்ப்பனனை.

காட்சி: ௪.

இடம்: *ஷியூர்க் குளக்கரை.*

காலம்: *மாலை*

உறுப்பினர்: *பட்டாபி, திருப்புளி முதலிய பதினொரு பேர்கள்.*

திருப்புளி – *காலையில் அம்மைச்சி வீட்டுக்குப் போய் வந்தேன்.*

பத்துப்பேர் – என்ன நடந்தது?

திருப்புளி – *காமக்கனல் தணிய அந்தக் காவேரியில் மூழ்கினேன் இருநூறு வெண்பொற்காசுகள் என் காலில் வைத்துக்கும்பிட்டாள்.*

இவ்வாறு திருப்புளி விட்ட கரடியின் பொருள் பட்டாபிக்கு மட்டும் தெரிந்திருக்கும். மற்றவர் நம்பினார்கள். கூட்டமும் கலைகிறது.

தொடர் 10-ம் பக்கம்

குயிலே!

தமிழ்த்தாய் உடைமைப் பத்து

பேர்

ஏர்தரும் நீலக் குயிலே! எனையீன்றாள்
பேர்தனை நாடறியப் பேசாயோ?—சீர்சால்
நலந்திகழ் நாவலந் தீவினள் நண்ணும்
கலந்திகழ் கன்னித் தமிழ்.

நாடு

கோல மணிக்குயிலே! கூறுக! என்தமிழ்த்தாய்
ஞாலத் தரசுகொள் நாடெதுவோ?—காலக்
கொடுமையால் இன்றெழில் கெட்டாலும் கொள்கைத்
தடுமாற்றம் தீர்தமிழ் நாடு.

நகர்

தேனமருஞ் சோலைச் சிறுகுயிலே! செந்தமிழ்த்தாய்
தானமர்ந்து வாழுநகர் தானெதுவோ? — ஞானக்
குழற்கும் முறைகோடாக் கொற்றவர்க்கு மாட்சி
வழங்கும் மதுரை நகர்.

ஆறு

பாடல் பழகும் பசுங்குயிலே! பைந்தமிழின்
ஆடல் சிறந்துவரு மாறுரையாய்! — பீடுறுநற்
பொய்யாக் குலக்கொடியாய்ப் பண்டு பொலிந்திருந்த
வையையா றென்றே மதி.

மலை

மாங்கொம்ப ரூசல் மகிழும் குயிற்பிள்ளாய்!
பூங்கொம்ப ரன்னாளின் பொற்புமலை — ஈங்குரையாய்!
விண்ணளவு நீண்டுயர்ந்து மேகக் குலம்படியும்
வண்ணப் பொதிகை மலை.

நீ கூறு!

— ஆ. அழகன் —

ஊர்தி

மாகலைகொள் சிந்தா மணியும் சிலம்புமுடன்
மேகலைகொள் வாள்ஊர்தி விண்டுரைப்பாய்—நீகுயிலே!
விள்ளரிய சீர்த்தி விளங்கும் புலவோர்தம்
உள்ளத்தேர் ஊர்வாள் இவள்.

படை

அன்பும் அமைதியுமே ஆய்ந்த உருவாயினுள்
இன்னளியோ டேற்றபடை என்னுரையாய்—வன்னக்
குயிலே! அவள்சீர்த்தி கொள்ஞாலம் கண்டுபுகழ்
அயிலே அறிவாம் படை.

முரசு

வாராய் இளங்குயிலே! மன்னும் தமிழரசி
சீரார்க்கும் நன்முரசு செப்புவாய்!—பாரார்ந்த
இன்பம் அறம்பொருள் எல்லாம் பெறமுழங்க
மன்னும் புலவர்மணி வாய்.

தார்

தூய மொழிக்குயிலே! தொல்லுலக வாழ்வுக்குத்
தாயானுள் மார்பிற்றூர் தானுரையாய்!—ஓயாது
பண்மிழற்றும் வண்டு படியுந் தொறும்மகிழ்ந்து
தண்டேன் தருந்தா மரை.

கொடி

வில்லும் புலியும் கயலும் விளங்கிடவே
அல்லலற வாழ்ந்தாள் அவள்கொடியைச்—சொல்லுகநீ
பிள்ளைக் குயிலே! பிறங்கு தமிழ்மானம்
துள்ளும் சுடர்க்கொடி யாம்.

காட்சி: ரு.

(ஒரு திங்கட்குப்பின்)

இடம்: செங்குந்தர் தெரு, அந்தகக்கவி வீரராகவ முதலியார் வீடு.

காலம்: காலை.

உறுப்பினர்: அந்தகக்கவி வீரராகவமுதலியார், பாவல்லாள் அம்மைச்சியம்மையார்.

நடைமுறை: கவிஞர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்க, அம்மைச்சியம்மையார் வருகின்றார்.

அம்மைச்சி: ஐயா, அம்மைச்சி வணக்கம்.

வீர– வருக அம்மையாரே! அனுகிய பார்ப்பனர் அனைவர்க்கும் உங்கள் செருப்படி கிடைக்கவே, அவர்கள் எல்லோரும் உங்களுக்குப் பெருந் தொல்லை விளைக்கக் கூடிக்கூடிப் பேசுகின்றார்களாம்! தேர்விழாவில் ஏதாவது நடக்குமென்று சொல்லுகின்றேன். ஆயினும் அச்சப்படத் தேவையில்லை. அவர்கள் ஐந்நூறு பேர், தமிழர் பல்லாயிரவர். நாம் தமிழர். எதற்கும் நம் நாட்டாண்மைக்காரரை நீங்கள் காணவேண்டும். கண்டு நடந்ததையெல்லாம் கூறவேண்டும். அவர் அயலூருக்குப் போக வேண்டுமாம். இப்போதே நீங்கள் காணவேண்டும்.

அம்-சென்று திரும்பிவருகின்றேன் ஐயா, வணக்கம்.

காட்சி சூ

இடம்; தேரோடுந் தெரு.

காலம்: தேரோடும் திருவிழாநாள், தேர் அம்மைச்சி வீட்டை அணுகும் நேரம்.

உறுப்பினர்: திருவிழாக் காண்போர், பார்ப்பனர், அம்மைச்சி, அந்தகக் கவி.

நடைமுறை: தேர் அம்மைச்சி வீட்டில் ஏற்றப்பட்டதால் வீடு இடிகிறது. தமிழர்கள் கண்கள் எரிகின்றன. பார்ப்பனர் உதடுகள் சிரிக்கின்றன.

அம்மைச்சி: (வெண்பா)

பெருமாள் திருநாளைப் பேயாக்க என்றே
வருமாண்டு தோறுமிந்த மாண்பர்—ஒருநாளும்
மாக்குதிரை யேறறிய மாசனங்கள் ஆமணக்கஞ்
சாய்க்குதிரை யேறினர் தாம்.

அந்தகக்கவி: (வெண்பா)

பாப்புக் குரங்கைப் படையாகக் கூட்டிவந்திர்
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே-கோப்பமைந்த
கொம்மைச் சிகர லங்கைக் கோட்டைஎன்று [கொண்டீரோ
அம்மைச்சி வாழ்வா ளகம்.

காட்சி: எ.

இடம்; ஊர்க்காவலர் நிலையம்

காலம்: பகல்.

உறுப்பினர்: ஊர்க்காவல் முதல்வர், பார்ப்பனர் நூறுபேர்.

நடைமுறை: முறையீடு

பட்டாபி - பேசப்பலர்க்கு — எங்களில் பலர்க்கு உதடு இல்லை. உங்களைக் காண, எங்களில் பலர்க்குக் கண்ணின் மேற்புறம் திண்ணை போல் வீங்கியிருப்பதால் கண்ணில்லை. உயிர் தப்பியவர்கள் இந்த நூறுபேர்கள்.

ஊர்க்காவலர்—அடித்தவர்கள் யார்?

பட்டாபி—தமிழர்கள்.

ஊர்க்காவலர்—எத்தனை பேர்?

பட்டாபி—ஐயாயிரம் பேர்கள்.

ஊர்க்காவலர் — நாள் ஒன்றுக்கு ஐந்து பேர் விழுக்காடு அழைத்துக் கேட்பேன். பேர் கொடுங்கள்.

பட்டாபி—அப்படியானால் போய்வருகின்றோம்.

திருவள்ளுவருக்கு இலச்சினை

தஞ்சை, மருதவாணன்.

இஞ்ஞான்று திருவள்ளுவரின் திருக்குறள் தமிழர் உள்ளத்தில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறது திருவள்ளுவரின் பெயரால் சொற்பொழிவுகளும், விழாக்களும் மாநாடுகளும் நிகழ்வுறுகின்றன. நாவை அசைப்பது பேசுவதற்கு எவ்வாறு இன்றியமையாததோ அவ்வாறே சொற்பொழிவுகளில் திருக்குறளை மேற்கோள் காட்டுவது இன்றியமையாததாகவும், வழக்கமாகவும், ஆகிவிட்டது, எங்கும் திருவள்ளுவர் படங்கள் திறக்கப்படுகின்றன. அறிஞர்முதல் அடிநிலைச் சொற்பொழிவாளர் வரை திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைக்கின்றனர்.

திருவள்ளுவர் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது; அப்படி இருக்க அன்னாரின் உருவத்தை எவ்வாறு இந்நாளில் நேரிற் கண்டவர்போல், படமாக எழுதிப் பின் திறப்புவிழா நிகழ்த்துகின்றனர் என்ற ஐயம் பகுத்தறிவாளர்க்கு எழுதல் இயல்பே! இவ்வறிஞர்கள் திறக்கும் படங்கள் எவ்வண்ணமிருக்கின்றன? சடைமுடி, திருநீற்றுப்பட்டை, நீண்ட தாடி பூணூல் ஆகியவற்றினைக் கொண்ட உருவமாய் அமைந்து காணப்பெறுகின்றன. இதுமட்டுமா? சீர்திருத்த வாதிகள்கூட திருவள்ளுவர் படங்களைத் திறக்காமலில்லை. அவர்கள் திறக்கும் படங்களில் மதக்குறிகள் இரா. தாடியும் முடியும் மட்டும் இருக்கும். ஆக அனைவருமே திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைப்பதில் விருப்பமுற்றிருக்கின்றார் என்று கூறலாம். இவ்வாறு இருதரப்பாரும் செய்யுமிச்செயல் பொருத்தமானதுதானா? "திருவள்ளுவர் இவர்தான்" என்று குறிக்க ஓர் இலச்சினை தேவைதானா? என்பனவற்றை ஈண்டு விளக்குதல் சால்புடைத்து.

திருக்குறளை யாத்தவருக்குச் சிலை எடுத்தலும், படமமைத்தலும் திறப்புவிழாச் செய்தலுமாகிய செயல்கள் பொருத்தமற்றவை தேவையற்றவை, அறிவுக்குப் புறம்பானவை என்னும் கருத்துக்கள் ஆராய்வார்க்குப் புலனாகாமற் போகா.

ஓர் உரையாசிரியர், தம் நூலில் மதக்குறிகள் அற்ற ஓர் உருவத்தைப் படமாக எழுதித் திருவள்ளுவர் எனக் காட்டியுள்ளார். அதுவும் தேவையற்றது, பொருத்தமற்றது. என்றே கூறுவோம், இன்னுஞ்சிலர் – தங்களைத் தமிழ்ப் பற்றாளர்கள் என்று பறைசாற்றிக் கொள்பவர்கள் "திருவள்ளுவர் திருவுருவத்தை அஞ்சற்றலைகளில் வெளியிடவேண்டும் அதற்கெனக் கிளர்ச்சி நடத்துவோம்" என்று கூறுகிறார்கள் இவர்களிற்சிலர் உண்மையிலேயே திருக்குறளிற் பற்றுள்ளவர்களாக இருக்கலாம்: ஆனால் பெரும்பகுதியினர் தமிழின் பெயரைச் சொல்லி வயிறுவளர்ப்பவர்களும், பரிமேலழகர்போன்று ஆரியநஞ்சைக் குறளின்மேல்' ஏற்றிக்கொண்டிருப்பவர்களுமே ஆவார்கள், இவர்கட்குத் திருக்குறளைப்பற்றிக் கவலையில்லை, பொதுமக்களிடையே தங்கள்பெயர் அடிபடவே இவ்வாறு கூறித்திரிகின்றனர். இவற்றை உணராத சீர் திருத்தவாதிகள் சிலரும் இவரையே சார்ந்து நிற்கின்றனர்.

இவ்வாறு கூறுவதால் "வேறு எதைத்தான் இலச்சினையாகக் கொள்வது?" என்று கேட்கலாம், திருவள்ளுவரைப் படமாக எழுதிக் காட்டுவதை விடுத்து திருக்குறளையே இலச்சினையாகக் கொண்டு படமெழுதலாம் எவ்வாறெனில், ஓர் ஓலைச்சுவடிக் கட்டின் உருவத்தைத் தீட்டி, அதன் மேல்பகுதியில் "திருக்குறள்" என்றெழுதிச் சுற்றிலும் நறுமலர்கள் விரவிக் கிடப்பனபோல் அமைத்து, அதனையே இலச்சினையாகக் கொள்ளலாம். அஞ்சற்றலைகளில்கூட இவ்வாறே வெளியிடலாம். இதற்கானமுயற்சியை ஒல்லும் வகையிற் செய்திடல் வேண்டும்.

இதனை விடுத்துத் திருவள்ளுவர் இப்படித்தான் இருந்திருப்பார் என்று கற்பனை செய்து

கொண்டு. சிலையோ; படமோ, அமைத்தல் சால்புடைத்தன்று என்பதைத் தமிழர்கள் உணர்வார்களாக! ஏனெனில் ஆளுக்கு ஒரு விதமாகப் படமெழுதிக் கொண்டு போனால் அது ஒரு நிலையில் அமையாது. மதவாதிகள் விருப்பப்படி திருவள்ளுவர் உருவம் அமைக்க வேண்டுமானால் அது ஒரு 'பண்டாரசந்நிதி'யின் உருவமாகத்தான் அமையும்! சென்னை மைலாப்பூர் திருவள்ளுவர் கோயிற் பூசாரியிடம் உள்ள பழைய அச்சுப்பதிப்பு நூலொன்றின் முகவுரையில் திருவள்ளுவரின் உருவ இலக்கணமும், அழகும் கூறப்பட்டிருக்கின்றன. அப்பாடலைக் கீழே காண்க:

"திருமுடி மிசையார் மயிர்முடி யழகும்
திர்க்கபுண் டரநுத லழகும்
திரண்மணிப் புயந்தை வருசெவி யழகும்
திகழ்நெடுந் தாடியி னழகும்
அருமுடி செபமா லிகையின்முத் திரைசேர்
அபயநேர் வலக்கையி னழகும்
அமிழ்துறத் தமிழ்மா மறைமுறை வரதம்
அமைதரும் இடக்கையின் அழகும்
கருமுடி யோகப் பட்டையி னழகும்
கடிகொள்கிட் கோவண அழகும்
கழல்களிற் றிகிரி வளைவரை யழகும்
கமலநல் லாதனத் தழகும்
தருமுடி முகிறேய் மயிலையி னடைமா
தவர்கள்கண் டிறைஞ்சவீற் றிருக்கும்
தழைபுகழ்த் 'திருவள் ளுவரெனு' நாம
சற்குரு சரணமே சரணம்"

மேற்கூறிய அனைத்துங்கொண்ட ஒருவர் திருக்குறள் இயற்றியிருப்பாரா அன்றிப்புராணம் எழுதியிருப்பாரா என்பதைப் பெருந்தகையாளர் சிந்தனைக்கே விடுகிறோம்.

இறுதியில் மதவாதிகளுக்கு ஒன்று: "திருவள்ளுவரையும் திருக்குறளையும் மதச்சாக்கடையில் தோய்க்க எண்ணி, உங்களது அழிவுக் காலத்தை விரைவுபடுத்திக் கொள்ளாதீர்!

உணர்வு பெற்ற தமிழர்

(வேம்பி, இரா. தமிழருவி.)

புவிதன்னில் முதன்முதலில் தோன்றிப்
பொன்மொழிகள் ஈரிரண்டை ஈன்றும்
நவிலரிய இளமையுடன் இன்றும்
நின்றிலங்கும் புகழ்மொழியே தமிழாம்
துவளாத தமிழரெங்கள் மொழிக்கே
தீங்கென்றால் தூங்கிவிழு வோமா?
கவலையின்றித் தூங்கிவிழு வோமேல்
கதிரவனில் இருள்தோன்றி யற்றே!

கல்தோன்றி மண்தோன்றா முன்னே
கத்தியுடன் கடமையுடன் வாழ்ந்த
சொல்லரிய மூத்தஇனம் எங்கள்
புவிபுகழும் தமிழரின மாகும்
நல்லறங்கொள் தமிழரினத் திற்கே
நலிவென்றால் நயப்போமோ தமிழர்?
நல்லினத்தின் நலிவுநயப் போமேல்
நிலவினிலே கனல்தோன்றி யற்றே!

முடிமன்னர் கொடிநட்டுச் சூழும்
முந்நீரில் கலம்விட்டு மாற்றார்
முடியடியில் நடவிட்டு மாளா
மொய்புகழை நட்டதெங்கள் நாடு!
படிமிசையே புகழேற்றும் நாட்டில்
பழியென்றால் பார்ப்போமோ தமிழர்?
தடியர்தம் பழியினைப்பார்ப் போமேல்
தண்கயத்தில் தாமரைவெந் தற்றே!

விற்பனையாளர் இல்லாத இடங்களில்...

குயில் இதழைப் பெற விரும்புவோர் உறுப்பினராகச் சேர்ந்து கொள்க.

விற்பனைசெய்ய விரும்புவோர் எழுதுக.

என் தாயே... என் கண்ணி.

(பழிப்புறு தமிழனை விழிப்புறச் செய்வது)

செந்தமிழா உன்நாட்டின் பேரென்ன செப்பென்றால்
இந்தியா என்றே இளிக்கின்றான் என்தாயே !

பைந்தமிழ் நாட்டினையும் பாரதம்என் றும்சொல்வான்
எந்தவகை இச்சேய் உருப்படுவான் என்தாயே !

தாயைத்தாய் என்றறியான் தாய்நாட்டைத் தீய்க்கின்ற
தீயைத்தாய் என்பான் திருந்தானோ என்தாயே!

தாய்மடியிற் குந்தித் தமிழ்முலைப்பால் உண்ணுகின்ற
சேய்தனக்கும் தாய்பேர் தெரிகிலையோ என்தாயே !

தமிழ்மொழிதான் தாய்மொழி என்னும் தமிழன்
தமிழ்நாடு தான்தனது தாய்நாடென் றெண்ணானோ ?

தமிழ்நாடென் தாய்நாடு தாய்மொழி தான்என்றன்
தமிழென் றுணரான் சழக்கனன்றோ என்தாயே !

கலைமுறைகா ணான் நாட்டைக் காட்டிக்கொடுப்பான்
தலைமுறைச்சீர் காணான் தலைவனென்பான் என்தாயே !

தொலையாச் சுரண்டல் தொலையாமல் தொண்டின்
விலைகேட்கும் வீணன் தலைவனா என்தாயே!

செந்தமிழ் நாட்டின் திருவிளக்கை மாய்க்கின்ற
இந்திவரக் கையொப்பம் இட்டான்ஓர் பேதைஅன்றோ ?

நம்தாய் அடிமை வடநாட்டான் நம்ஆண்டான்
இந்தநிலை மாற்றா திருந்தென்ன என்தாயே !

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

தெய்வம்

"தெய்என் கிளவி கொள்ளலும் கோறலும்" என்பதொரு நூற்பா. பிங்கலந்தைப் பழம் பதிப்பில் காணப்பட்டது.

இதே நூற்பா தெய்யென்கிளவி கோறலும் தெய்வமும் என்ற வேற்றுமையுடன் புதிய பதிப்பில் காணப்படுகின்றது.

ஆதலின், தெய் என்பதற்குக் கொல்லுதல், விழுங்குதல், தெய்வம் என்பன பொருளாகக் கொண்டால் இழுக்கில்லை.

இதனால் நாம் அறியக் கிடக்கும் செய்தி என் எனில் கூறுவோம்.

அறிவு நிரம்பாத பண்டை நாளில், பெருங்காற்றையும், கனலையும், காட்டாற்றையும், வெப்புறுத்தும் வெங்கதிரையும் பெருமழையையும், விலங்குகளின் எதிர்ப்பையும் "தெய்" என்று சொல்லி வந்தார்கள்.

அறிவு நிரம்ப நிரம்ப அவற்றின் பெரும் பயனை அறிந்து அவற்றைப் பயன்படுத்துவாராயினர்.

அறிவு நிரம்பாப்போது வெறுப்புப் பொருளில் வழங்கப்பட்ட "தெய்" அறிவு நிரம்பிய காலத்து விருப்புப் பொருளில் வழங்கலாயிற்று. தெய்என்ற சொல் அம் இறுதிநிலையும் வ் என்ற பெயரிடைநிலையும் பெற்றுத் தெய்வம் என்றாயிற்று. (தெய்+வ்+அம்)

அறிவு நிரம்பாதபோது வெப்புறுத்திய ஞாயிற்றையும், நிலவுறுத்திய திங்களையும் துன்புறுத்திய தீயினையும் அறிவு நிரம்பிய காலத்து எவ்வாறுபோற்றினர் என்பது நோக்கத்தக்கது:

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

என்ற இந்தத் தொல்காப்பிய நூற்பாவால் ஞாயிறு, தீ, திங்கள் ஆகிய மூன்றையும் வடுநீங்கு சிறப்புடைய தெய்வங்கள் என்று வாழ்த்தியது புலனாகிறதன்றோ!

மழையைத் தெய்வமாகக் கொண்டனர்-போற்றினர். புனலைத் தெய்வமாகக் கொண்டனர்-போற்றினர்.

இங்கு அறியத்தக்க மற்றோருண்மை என்னெனில் தெய்வம் என்ற சொல்லால் இந்நாள் சொல்லப்படுவன பயன்பொருள்களும், கண்ணையும் கருத்தையும் கவர்கின்ற பொருள்களும் ஆம்.

பசு தெய்வம், நிலம் தெய்வம் நீர் தெய்வம் சொல் தெய்வம், பெரியவர் அருளிய நூல் தெய்வம், பிறவும் தெய்வங்கள் சமையக் கணக்கர் இத்தெய்வங்களை எல்லாம் மேல் நின்று நடத்துவதோர் பெரியபொருள் உண்டென்றும், அது கடவுள் இயவுள் என்றெல்லாம் பெயர் பெறும் என்றும் கூறினாராக, அச் சமையக் கணக்கு முற்றிய வழித் தாம் தாம் கண்ட கடவுள் இப்படி இப்படி என்று கூறுவாராகி உலகில் கலாம் பல விளைத்து வருவாராயினர்.

தெய்வம் தூய தமிழ்ச்சொல் என்பதில் தமிழர்க்கு ஏதேனும் ஐயமிருக்க முடியுமா? முடியாதன்றோ!

ஆனால் பார்ப்பனனும், அவன் வால் பிடித்துத் திரியும் சில தமிழர்களும், தெய்வம் வடசொல் என்று உளறிவருகிறார்கள்.

தெய்வம் என்பது தூய தமிழ்ச்சொல் என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு வருமாறு:

தொல்காப்பிய நூன்மரபு உசு-வது நூற்பா ய், ர், ழ், என்னும் மூன்று மெய்யினமுன் க, த, ந, ப, ம, ச, வ, ஞ, ய, என்ற ஒன்பது எழுத்துக்களும் தனித் தனி வந்து நிற்கும் என்று கூறுகையில், "ய்" முன் "வ" வருவதற்கு எடுத்துக்காட்டாக "தெய்வம்" என்ற சொல் காட்டப்பட்டுள்ளது.

எனவே தெய்வம் தூய தமிழ்ச்சொல் என்பதை எவராலும் மறுக்க முடியாதன்றோ?

★

பகைக்கடல்!

(கா. வேழவேந்தன்)

நீள்கடலே! கொடுங்கடலே! தமிழர் வாழ்வில்
நீங்காத பெருங்குற்றம் இழைத்தாய் உன்றன்!
தோள்மீது ஏறியன்று கடந்தார் என்ற
சொல்லுக்கோ பழிவாங்கிக் கொண்டாய்! ஐயோ!
வாள்கொண்டு போர்கண்ட அன்னோர் வாழ்வின்
வரலாற்றுக் காட்சிகளை நூற்கள் தம்மைக்
கோள்கொண்டே அழித்திட்டாய்! அவரை என்றும்
குனிந்தெழாப் புழுவாக்க வழிஏன் கண்டாய்?

யாழ்அழித்தாய்! குழல்அழித்தாய்! அவன்வ ளர்த்த
அருங்கலைகள் அனைத்தையுமே அழித்தாய்! சான்றோர்
சூழ்ந்துநின்ற தமிழ்ச்சங்கம் அழித்தாய்! எங்கள்
தொன்மதுரை அழகுநகர் அழித்தாய்! தங்கள்
வாழ்நாட்கள் முழுவதுமே உன்னைக் காணா
மரபொன்றும் எமையாளத் துணைநீ செய்தாய்!
பாழ் பாழ் பாழ் எல்லாமே தமிழன் இங்கே
பரதேசி யாய்அலைய வழிஏன் கண்டாய்?

பகைக்கடலே! உன்பசிக்கே இரையாய் எங்கள்
பாட்டன்மார் வளர்த்திட்ட கலைதான் உண்டோ?
நகைசெய்ய அணிந்துகொள்ள ஆணி முத்தை
நல்குகின்றாய் என்கின்றார்; மான மென்னும்
நகைதன்னைக் கொள்ளைகொண்ட பிறகா கீழோர்,
நகைக்கின்ற நிலைவந்த பிறகா நீயும்
வகைகாட்ட வருகின்றாய்! தமிழன் இன்று
வக்கற்றுப் போனதற்கு வழிஏன் கண்டாய்?

குமரிக்கோ டழித்திட்டாய்! தமிழர் வெற்றி
கூறிவந்த பஃறுளியை மறைத்தாய்! நாங்கள்
எமதென்று மார்தட்டிச் சொல்லத் தக்க
இலக்கியங்கள் எத்தனையோ ஒழித்தாய்! அன்று
சுமைதூக்கும் கலங்களெலாம் சூழ்ந்து நின்ற
துறைகளையும் சுவட்டினையும் சுருட்டிக் கொண்டாய்!
சமர்கண்ட தமிழனின்று நாதி யின்றித்
தத்தளிக்க வெறிக்கடலே! வழிஏன் கண்டாய்?

புரட்சிப் பாவலர்

தீட்டும்

"பிசிராந்தையார்"

உரைநடை நாடகம்

குயில் இதழ்தோறும் தொடரும்

எதிர்பார்க்க!

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75.	ரூ. 8—50.
ஆறுமாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 18 காசுக்குத் தபால் தலை அனுப்புக.

★

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு

முழுப்பக்கத்திற்கு ரூ. 100

அரைப்பக்கத்திற்கு ரூ. 50

கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக.

★

எழுத்தாளர்க்கு...

தமிழ், தமிழர், தமிழ்நாடு முன்னேற்றம் பற்றிய சீரிய கருத்துக்களைக் கொண்ட எளிய இனிய கவிதை கதை கட்டுரைகளை நம் குயிலுக்கு எழுதுக.

எழுதுவனவற்றைக் குயிலின் ஒருபக்க அளவிற்கு, அழகாகத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுக.

வெளியிடப் பெறுதனவற்றைத் திரும்பப் பெறப் போதிய அஞ்சற்றலைகள் அனுப்ப வேண்டும்.

★

விற்பனையாளர்க்கு...

விற்பனை விண்ணப்ப விதிகளில் கண்டுள்ள படி தேவையான இதழ்கட்குரிய முன்பண மின்றிக் "குயில்" இதழ்கள் அனுப்பப்பட மாட்டா.

கூடுதலான இதழ்கள் வேண்டுவோர் இதை நோக்கித் தேவையான இதழ்கட்குரிய முன்பணம் அனுப்புக.

விண்ணப்பத்தாள் பூர்த்தி செய்தனுப்பா மலும், அனுப்பிப் பணமனுப்பாமலும் இருப் போர்க்கு இதழ்கள் அனுப்பப்படுவதில்லை.

"குயில்" இதழ்கள் நன்குகப் பார்வை யிட்டே அனுப்பப்படுகின்றன. ஆகையால் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாக முடியாது.

குயிலகத்துக்கு அனுப்பும் தொகையைப் பணவிடை (M. O.) மூலம் மட்டுமே அனுப்பி அதன் இரசீதையும் அனுப்ப வேண்டும்.

செக்முதலாயின ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

★

அமைச்சர்,

குயிலகம் புதுச்சேரி.

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன் புதுச்சேரி.

அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.